விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஐப்பசி 21 முஹரம் 8 இதழ் 264
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 6-11-1981

யாழ் நகரில்

## திருட்டுப்பொருட்களுடன் இளைஞர்கள் பலர் கைது!

[சுண்டிக்குளி]

யாழ். நகரில் நடந்த இராணுவ துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து நகரில் ஏற்பட்ட பதட்ட நிலையைப் பயன்படுத்தி நகரின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட கொள்ளைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் பலரை பொலிசார் கொள்ளைப் பொருட்களுடன் கைது செய்துள்ளனர்.

ஆனைக்கோட்டைப் பகுதியில் நடைபெற்ற களவுச் சம்பவங்களில் சம்பந்தப்பட்ட ஏராளமான வெள்ளிச்சாமான்கள் குத்துவிளக்குகள். வெள்ளிக்கிண்ணங்கள் பெற்றோல் மக்ஸ் ஆகியவற்றை திடீர் வேட்டையில் யாழ் பொலிசார் மீட்டுள்ளனர்.

கொழும்புத்துறை அரியாலை கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த 3 இளைஞர்களை பொலிசார் கொள்ளைப் பொருட்களுடன் கைது செய்துள்ளனர்.

மண்டைதீவு கிராமசேவகர் அலுவலகத்திலும் ஆலடிப் பிட்டி கடையொன்றிலும் களவு போன பொருட்கள் மீட்கப்பட்டுள்ளது. (க)

## இழுபறி நீடிப்பு

நியூயோர்க், நவ. 5

ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபை இன்று கூடிய போது ம் புதிய பொதுச்செயலாளரைத் தெரிவுசெய்யத் தவறிவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இப்பதவிக்குப்போட்டியிட்ட தற்போதைய ஐ. நா. பொதுச் செயலாளர் கலாநிதி குர்த் வால்ட்ஹெய்முக்கு எதிராக சீனு ஒருமுறை "வீட்டோ" செய்திருந்தது

ஐ. நா. சபையின் புதிய பொதுச்செயலாளர் பதவிக்குப் போட்டியிடும் மற்றைய வேட்பாளரான தான் சானியா வெளிநாட்டமைச்சர் ஜனுப் சலீம் அகமட்டிற்கு எதிராக அமெரிக்கா இருமுறை வீட்டோ செய்துள்ளது.

## அன்ரன் வழக்கு

[யாழ்ப்பாணம்]

பொலிஸ் சார்ஜன்ட் அன்ரன் கொலை வழக்கு விசாரணை இன்று யாழ் நீதிமன்றத்தில் யாழ் நீதவான் திரு ரி ஜேசநாதன் முன்னிலையில் நடைபெறுகிறது. (மா)

# தமிழ் மாவட்டங்களில்

# ஆசிரிய நியமனம்

## ஆங்கில ஆசிரியர்களுக்கு அதிக சந்தர்ப்பம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அடுத்த வருடம் நியமனம் பெறவிருக்கும் ஆசிரியர்கள் [தமிழ் போதனு மொழி] பற்றிய விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் நியமிக்கப்படவிருக்கும் ஐயாயிரம் ஆசிரியர்களில் மொத்தம் 1021 ஆசிரியர்களில் 589 ஆசிரியர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்தும் மிதுதியான 432 ஆசிரியர்கள் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்படுவார்கள்.

| ஆசிரியர்கள் | யாழ். | வவனியா | முல்லைத்தீவு | மன்னார் | மட்டக்களப்பு | திருமலை |
|---|---|---|---|---|---|---|
| ஆங்கிலம் | 65 | 45 | 45 | 50 | 85 | 67 |
| விஞ்ஞான/கணிதம் | 12 | 06 | 08 | 00 | 02 | 00 |
| விவசாயம் | 20 | 04 | 09 | 15 | 16 | 03 |
| மனையியல் | 25 | 04 | 06 | 09 | 15 | 09 |
| சித்திரம் | 08 | 02 | 02 | 02 | 02 | 02 |
| சங்கீதம் | 30 | 04 | 03 | 00 | 04 | 02 |
| நடனம் | 05 | 00 | 00 | 00 | 03 | 00 |
| | 165 | 65 | 73 | 76 | 127 | 83 |

யாழ்ப்பாணம், வவனியா, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய ஆறு மாவட்டங்களிலும் 589 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்ற விபரம் நேற்று உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டது. மொத்தம் 1021 பேருக்கு நியமனங்கள் வழங்கப்படும். ஆசிரியர்களின் அடிப்படைத் தகைமை ஜி சி ஈ. உயர்தரம் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் அறிவிக்கப்பட்டிருக்கும் ஆங்கில, விஞ்ஞான - கணித, விவசாய, மனையியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆசிரியர்களில் ஆங்கில ஆசிரியர் பதவி கோரி மனுச்செய்வோர் ஜி. சி. ஈ. (உயர்தரம்) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரணச் சித்தி அல்லது ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி பெற்றிருக்கவேண்டும். விஞ்ஞான - கணித ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிப்போர் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகம், இரசாயனம், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் ஜி சி ஈ. [உயர்தரம்] பரீட்சையில் ஏதேனும் மூன்று பாடங்களில் சித்திபெற்றிருக்கவேண்டும். (ம)

## யாழ். பேக்கரியில் சிக்கியவர்

(சுண்டிக்குளி)

யாழ் நகரிலுள்ள பேக்கரியொன்றில், திருடுவதற்காக ஒளிந்திருந்து உள்ளே இறங்கியவரை, பேக்கரி உரிமையாளர் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

யாழ். நகரிலுள்ள சித்தி பேக்கரியில் இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு நடந்துள்ளது.

சந்தேக நபரான குருநாகலையை சேர்ந்த சரத்குமார என்பவரை, மடக்கிப்பிடித்த பேக்கரி உரிமையாளர் கொன்னுரோலிஸ் ஜயவர்த்தன இதுபற்றி பொலிசில் புகார் செய்துள்ளார்.

அப்புகாரில் - சம்பவதினம் தான் பேக்கரியில் நித்திரையாக இருந்ததாகவும், நள்ளிரவு ஒரு மணியளவில் சத்தம் கேட்டு எழும்பியபோது கொள்ளையடிக்க வந்த திருடனை அரை நிர்வாணத்துடன் கண்டதாகவும், அவனை மடக்கிப் பிடித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் விசாரணையில் சந்தேகநபர் வேலைதேடி வந்ததாக தெரிவித்துள்ளார். (க)

## திருமண அழைப்பு

மணமகன்: செல்வன்

Dr. இ. குமாரவடிவேல்

விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்

[முன்னைநாள் யாழ் மாநகர உப முதல்வர் அமரர் சே. இராசரத்தினம், திருமதி அ. இராசரத்தினம் அவர்களின் ஏக புதல்வன்]

மணமகள்: செல்வி இ. இராஜினி

ஆசிரியை, மகாஜனக் கல்லூரி

தெல்லிப்பழை

இடம்: மணமகள் இல்லம்

காலம்: 9-11-1981 திங்கள்

மு. ப. 9-42—10-54 மணி

உறவினர்களையும், நண்பர்களையும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி அ. இராசரத்தினம்
8, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

திரு. செ. இராமலிங்கம்
[சட்டத்தரணி]
திருமதி அ. இராமலிங்கம்
[மணமகளின் பெற்றோர்]
புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.

[1381]

இரண்டரை லட்சம் ரூபா

## பெறுமதியான ஜவுளிகள் மாத்தறையில் கொள்ளை!

[கொழும்பு]

மாத்தறையிலுள்ள கடையொன்றில் சுமார் 2லட்சத்து 43 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு கடை உரிமையாளர் கடையைப் பூட்டிவிட்டுச் சென்றதாகவும் மறுநாள் காலை வந்து பார்த்தபோது கொள்ளையடிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸ் புகாரில் கூறப்பட்டுள்ளது.

விலையுயர்ந்த ஜவுளிவகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாம். (ஸ)

யாழ். விலைக்கட்டுப்பாட்டு

## அதிகாரிகளின் கவனம் தியேட்டர்பக்கம் திரும்புகிறது!

[சுண்டிக்குளி]

யாழ். விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளின் கவனம் தற்போது யாழ். மாவட்டத்தில் உள்ள சினிமாத் தியேட்டர்களின் சிற்றுண்டிச் சாலைகளின் பக்கம் திரும்பியுள்ளது.

மனிதாபிமானத்துக்கு அப்பாற்பட்ட விலைகளில் இச்சிற்றுண்டிச் சாலைகளில் குளிர்

[6-ம் பக்கம் பார்க்க]

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் துர்மதி ஆண்டு ஐப்பசி மாதம் 22-ம் திகதி (7-11-81) சனிக்கிழமை பகல் 11-00 மணி முதல் 12-30 மணிவரை வரும் சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எனது கனிஷ்ட புத்திரன் | எனது புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| கந்தசாமி | இரத்தினேஸ்வரி |
| உதவி ஆசிரியர் | ஆசிரியை |
| "ஈழநாடு", | புனித சவேரியார் மகளிர் |
| யாழ்ப்பாணம் | கல்லூரி, மன்னார் |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

சங்கரத்தை, துணைவி தெவிட்டப்பிராய் முருகமூர்த்தி ஆலயத்தில் திருமணம்செய்யத் திருவருள் கூடியிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு உளமார அழைக்கின்றோம்.

[மணமகன் இல்லத்தில் 8-11-81 ஞாயிறு மாலை வரவேற்பு உபசாரம் நடைபெறும்.]

இங்ஙனம்

திரு.வ. இரத்தினம் - திருமதி த. திருஞானம்

"நவமணிக்குன்றம்"
சித்தங்கேணி.

[1380]

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

## சுங்க ஏல விற்பனை

கீழ்க்காணும் பொருட்கள் 10-11-81 செவ்வாய்க்கிழமை [காலை 10 மணியளவில் யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனையின் முழு நிபந்தனைகளும் 1954-ம் ஆண்டு மே மாதம் 28-ம் திகதி வெளியிடப்பட்ட 10675-ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் 1-ம் பிரிவு 2-ல் பிரசுரிக்கப்பட்டுள்ளன

1. இந்தியாச் சாரங்கள்
2. இந்திய வொயில் / காஞ்சிபுரம் சேலைகள்.

ஒப்பம்:

எஸ். எம். ஜே. சேனரத்ன

சுங்க சேகரிப்பாளருக்காக

யாழ். மாவட்டம்.

சுங்க இலாகா,
யாழ்ப்பாணம்
4-11-81.

1384

### மணிவாக்கு

கடவுளை அடைதற்கு சாதுக்களுடைய சற்சங்கம்: விவேக இயல்பு, உண்மையான குருவின் ஆசிகள் இவை கிட்டவேண்டும்.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## ஒத்துவாழ்

துண்டு பட்ட பாராளுமன்றம் மீண்டும் ஒன்றுபட்டுக் கூடியிருப்பதை நாட்டின் நலம் விரும்பும் பிரஜைகள் அனைவரும் வரவேற்பார்கள்.

காலத்துக்குக் காலம் எதிர்க்கட்சியினர்கள் ஒன்றாகவும் தனிப்பட்டும் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வந்தனர்.

நடுநிலைமை கொண்டு இதனை அவதானித்தவர்கள் இவ்வித பகிஷ்கரிப்பு நியாயமான தென்று கொண்டிருப்பார்கள். எதிர்க்கட்சியினரின் கருத்தை ஏற்காவிட்டாலும் கீழ்த்தரமான கிண்டலும் அவமதிப்பும் காட்டாது அதனைச் செவிமடுப்பது நாட்டை ஆளப் பிரதிநிதித்துவம் பெற்ற பெரியோர்களின் பெரும் பொறுப்பு.

கடந்த ஆட்சியில் இத்தகைய பொறுப்பற்ற நடவடிக்கைகளை ஆளும் கட்சியினர் கையாண்டபோதெல்லாம் எதிர்க்கட்சித் தலைவராயிருந்த இன்றைய ஜனாதிபதி தக்கமுறையில் தீவிரமாகக் கண்டித்து பொதுமக்களின் ஆதரவைப் பெற்றிருந்தார்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா பிரசன்னமாயிருக்காத இன்றைய பாராளுமன்றம் டென்மார்க் இளவரசன் இல்லாத 'ஹம்லெற்' நாடகம்போல் காட்சியளிப்பது கண்கூடு.

சிங்கப்பூர் ஒற்றை ஆட்சியை அரசு விரும்புகிறதா என்ற சந்தேகம் உருவெடுக்கமுன் பாராளுமன்றம் மறுபடியும் முழுமையான வடிவில் கூடுவது மக்களுக்குத் தேறுதல் அளிக்கும் செய்தி.

நாட்டின் நாலாபக்கமும் தினசரி வாழ்விற்குழப்பநிலை கூடிக்கொண்டு வருகின்றது. இதற்கெல்லாம் வடக்கில் நிகழ்ந்த பயங்கரவாதச் செயல்கள்தான் காரணம் என்ற வகையில் பொறுப்பற்ற தலைவர்கள், பிரமுகர்கள் 'தணிக்கை' என்றால் என்னென்று தெரியாத பத்திரிகைகள் அல்லும் பகலும் ஆற்றுகின்றன.

1971ம் ஆண்டு தெற்கில் நிகழ்ந்த மாபெரும் பயங்கரவாதம் வடக்கில் எதுவித குழப்பத்தையும் ஏற்படுத்தியதா? பல இடங்களில் - பல பொலிஸ் நிலையங்களில் அன்று நடந்த தாக்குதல், ஆயிரக்கணக்கான கொலைகள், கொள்ளைகள் பொலிஸாரையோ, இராணுவத்தினரையோ அங்கு வாழும் பொதுமக்களுக்கு சேதம் விளைவிக்கத் தூண்டினதா? இல்லை.

வெளிநாட்டு உதவியைக் கொண்டபோதும் நீண்டகாலக் கலவரம் வேரோடு கிள்ளப்பட்டது; அதனை இனங்கண்டு தக்க நடவடிக்கைகளை தக்க நேரத்தில் மனத்திடத்துடன் எடுத்த அன்றைய பிரதமருக்கே அந்த வெற்றி சாரும்.

அன்றைய பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுக்கு எந்த எதிர்க்கட்சியும் ஒத்துழைப்பு நல்கத் தயங்கவில்லை.

நாட்டின் பாதுகாப்பு மக்களின் முதற்தேவை.

நாடு கெட்டு, மக்கள் பாதுகாப்பின்றி வாழும்நிலை அதிகரித்து வந்தால், அரசியல் பேதங்கள் தலையெடுக்காட்டா.

தனிமனிதனோ, நாடோ தன்னைத்தான் பாதுகாப்பதையே முதற்கடமையாகக் கொள்வது அடிப்படை இயல்பு. போலந்தில் மார்க்ஸியவாதிகளும் கத்தோலிக்க திருச்சபையினரும் ஒன்றுகூடி நாட்டின் இன்றைய நெருக்கடியை எவ்வாறு தீர்க்கலாமென்று ஆலோசனைகள் எடுக்கும் சாத்தியம் இருப்பதில் என்ன அதிசயம்?

முதலாளித்துவ நாடுகளும் கம்யூனிஸ்ற் நாடுகளும் உடன்வாழ முடியாதென்று நாம் நம்பவில்லை. கிறிஸ்தவர்களும் மகமதியர்களும் ஆறு நூற்றாண்டுகள் போர் புரிந்து படித்த ஒரு பாடம். "ஒத்து வாழ்வதே இரு வருக்கும் நன்மை பயக்கும்"

வரலாற்றைப் படித்த நாம் இன்னும் இந்தப்பித்தலாட்டங்களையும் அவற்றின் அழிவுகளையும் திரும்பவும் நடிக்க விரும்பலாமா?

உலக அரங்கில் என்னதான் நிகழ்ந்தாலும் நாமிந்தச் சின்ன அழகிய சுதந்திர நாட்டில் 35 வருடங்களாக போதிய முன்னேற்றம் காணாமல், உள்நாட்டு இனக்குரோதத்தில் காலங்கழிப்பது உலகத்துக்கே ஒரு இரிப்புக்கிடமான நிலை.

ஆட்சியாளரின் பிரசாரம் அண்டப்புளுகுபோலிருந்த போதும் நாட்டின் அரைவாசி மக்கள் பெரிதும் துன்ப வாழ்வில் தவியுடைக்கின்றனர். இதனைக் கருத்திற் கொண்டு, இந்த எஞ்சிய கால எல்லைக்குள் ஆட்சிக்கு எல்லாக்கட்சிகளும் ஒத்துழைப்பு நல்கி நிலைமையைச் சீராக்க உதவவேண்டும். இது ஒரு புண்ணியச் செயல்

இந்தவகையில் குறிப்பாக வடபகுதியிலும் பொதுவாக நாடெங்கிலும் நிலவும் குழப்பநிலையை நீக்க, தமிழர் விடுதலைக்கூட்டணி அரசுடன் ஒத்துழைக்க முன்வந்தது விவேகமான செயலாகும். அதன் விளைவை மக்கள் முன்வைப்பது அவசியம்

இன்றைய ஜனநாயக உலகில் ஒவ்வொரு பிரஜையும் ஒவ்வொரு கருத்துடையவராக விருக்கலாம்; இருப்பினும் இன்றைய நெருக்கடியில் இந்த ஒற்றுமை நடவடிக்கைகளை நாம் கண்டிக்கக்கூடாது. கவனித்து ஆவன செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

### முன்னாள் நீதிபதி விடுதலை

(கொழும்பு)

ஊழல் நிர்வாகச் சீர்கேடுகள் தொடர்பாக விசாரணைக்குட்பட்டிருந்த முன்னை ஹோமாகம மாவட்ட நீதிபதி எவி. அமரசிங்கா, உயர் நீதிமன்றத்தால் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவ்விசாரணை நீதியரசர்கள் திரு. எஸ் சர்வானந்தா, திரு. ஜே ஜி ரி வீரரத்ன, திரு. விக்டர் பெரேரா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

விசாரணையின் போது தன் நிலை விளக்கம் அளித்த முன்னாள் நீதிபதி தன்மீது சாட்டப்பட்ட குற்றங்களை மறுத்து தகுந்த காரணங்களை வழங்கியிருந்தார். (கி)

### "கிராமாபிவிருத்திச்சங்கங்கள்

# முதலில் கொள்கைகளை புரிந்து கொள்ளவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஜனநாயக அடிப்படையிலான அபிவிருத்திக் கொள்கைகளை நன்கு புரிந்துகொள்ள வேண்டும்" என்று யாழ். மாவட்ட திட்டமிடல் அதிகாரி திரு. வி. செ. சுவாமிநாதன் சரணவாய் மத்திகிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூன்றாவது ஆண்டு நினைவுவிழாவின்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. எஸ். பரமசாமியின் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. சுவாமிநாதன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அரசாங்கம் ஒவ்வொரு தனிமனிதனது தேவைகளையும் நிறைவேற்ற முடியாது. சங்கங்களின் கோரிக்கைகளைக் கேட்டு நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்க ஊழியரின் பெருமளவு நேரத்தை செலவிடுகிறார்கள். எனவே மக்கள் சங்கங்களிற் சேர்வது அவர்களின் தேவையும் கடமையும். சுயமாருகத் தங்களை நம்பியுள்ள மக்களுக்கு உண்மையான சேவை செய்வது சங்கங்களின் கடமை. எப்பொழுது அரசாங்கம் நிதியைத் தரும், வேலைத் திட்டங்களைச் செய்யலாமென்று காத்திருக்கும் சங்கங்களால், புதிய உத்தியோகத்தர் தெரிவுக்காக வருடாந்த கூட்டங்களை நடத்துவதற்கு மேலாகவும், அருமையாக ஏதாவது வேலையைச் செய்வதற்கு மேலாகவும் எதையுமே சாதிக்க முடியாத மக்களின் அபிலாசைகளை உணர்ந்து ஆரம்ப கட்டத்தில் செலவு குறைந்த - ஆனால் தாக்கம் நிறைந்த வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவது மூலம் மக்களைக் கவரக்கூடிய சங்கங்களே

(6-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

### மாவட்ட அபிவிருத்தி உப அலுவலகங்கள்

மாவட்ட அபிவிருத்திசபையின் கீழ் கொண்டுவரப்பட்ட உள்ளூராட்சி சபைகள் தற்பொழுது அவைகள் தாங்கள் முன்னர் நிறைவேற்றிய கடமைகளை செய்துகொள்கின்றனவா என்ற பிரச்னை தற்பொழுது தலைதூக்கியுள்ளது. முன்னர் போல இங்கு கடமைகள் நிறைவேற்றப்படுவதில்லை என்பது உண்மையே என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

யாழ். மாவட்டத்திலுள்ள 9 பட்டினசபைகளும் 45கிராம சபைகளும் தற்பொழுது மாவட்ட அபிவிருத்திசபையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் இக்கிராம சபைகளிலும் பட்டினசபைகளிலும் கடமையாற்றும் ஊழியர்கள் பொறுப்பற்ற முறையில்தான் கடமையாற்றவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவையுள்ள வரியிறுப்பாளர் ஒருவர் தனது தேவை ஒன்றினைத் தனது சபை மட்டத்தில் இன்று செய்யமுடியாத நிலையே உருவாகியுள்ளது என்றே கூற வேண்டியுள்ளது. இதனை நிவர்த்தி செய்ய உடன் மாவட்ட அபிவிருத்திசபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பொது மக்கள் மிகவும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

சில சபைகளில் உள்ள ஊழியர்கள் கட்டுப்பாடற்றமுறையிலும் தினவரவில் ஒழுங்கீனமாகவும் நடந்துகொள்வதாகக் கூறப்படுகிறது. இந்த இடைவெளியை அபிவிருத்திசபை உடனடியாக இல்லாமற்செய்ய வேண்டும். கொழும்பில்குவிந்து கிடக்கும் அதிகாரத்தைப்பரவலாக்க மாவட்ட சபை உதவியாக அமைந்தவேளையில் பட்டின, கிராமசபை அதிகாரங்களை மாவட்டசபை மட்டத்தில் குவியவைத்து மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாது. இதற்கான நிர்வாக அமைப்பினை ஏற்படுத்தி சம்பந்தப்பட்ட சபைகளினது நடைமுறைகளை மேற்பார்வை செய்வது விரும்பத்தக்கது. அத்துடன் இச்சபைகளை முகாமை செய்ய வெவ்வேறு ஆலோசனைக்குழுக்களை மாவட்டசபை நியமித்து உதவலாம்.

-எஸ். கே. ரி.

சங்கானை

# கொத்தணி முறையின் கீழ் பிரச்னைகள் அதிகரிக்கும்

(நேற்றைய தொடர்ச்சி)

இத்திட்டத்தின்படி நடைமுறையில் ஏறக்குறையப் பத்துப் பள்ளிக்கூடங்கள் ஒரு பொதுநிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படும். மூலாதாரம் பள்ளிக்கூட அதிபரே நிதி ஒதுக்கீடு செய்தல், வசதிகளைப் பகிர்தல், மூலவளங்களைப் பல பள்ளிக்கூடங்களுக்கும் அளித்தல் ஆகியவற்றினைச் செய்வார்.

கூட்டாக அல்லது தொகுதிகளாக்கப்படும் பள்ளிக்கூடங்களில் எத்தனையாம் வகுப்பு வரை வைக்கலாம், எது மூலாதாரப் பள்ளிக்கூடமாக விளங்கும் போன்ற பிரச்னைகளும் தலைதூக்கலாம். மூலாதாரப் பள்ளிக்கூட அதிபர் முதன்மை பெற்றவர் என்ற காரணத்தினால் சர்வாதிகாரத் தன்மை கொண்டவராகவும் விளங்க முடியும்.

**பா. சந்திரசேகரம்**

(துணைப்பேராசிரியர் யாழ். பல்கலைக்கழகம்)

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இம்முறையினால் பிரச்னைகள் அதிகரிக்கும். தமிழ் மாணவர்கள் பரவலாக இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் கற்கிறார்கள். இதனால் தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் சிங்களப் பள்ளிக்கூடங்கள் அடங்கும் தொகுப்பில் அல்லது கொத்தணியில் இடம்பெற வேண்டி நேரிடும்.

மலையகத்தில் உள்ள தோட்டப் பள்ளிக்கூடங்கள் என்று அழைக்கப்படும் பள்ளிக்கூடங்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக ஒரு புது நிலையை அடைந்து வருகின்றன. இக் கொத்தணி முறையினால் இத் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் அருகிப்போகும் நிலையும் உண்டாகும். மலையக ஆசிரியர் சங்கங்கள் இம்முறையை வன்மையாகக் கண்டித்துள்ளன. முஸ்லிம் ஆசிரியர்களும், அகில இலங்கை ரீதியல் எதிர்க்கின்றார்கள்.

பல சமூகங்கள் வாழ்கின்ற கிழக்கு மாகாணத்திலும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களின் நிலை சமூகத்தில் ஆதிக்கம் கொண்ட பள்ளிக்கூடங்களால் பாதிக்கப்பட இடமுண்டு.

வடமாகாணத்தை பொறுத்தவகையில் கொத்தணிகள் அமைப்பதிலும் பிரச்னைகள் உண்டாகலாம்.

பள்ளிக்கூடங்களுக்கு இடையே ஆசிரியர்களுக்கு இடையே வர்க்க பேதம் உண்டாகும். கொத்தணி முறையில் குறைபாடுகளைக் கூட்டும் வகையில் ஒற்றைநிலைப் பள்ளிக்கூடங்களும் தனியார் பள்ளிக்கூடங்களும் அமையும்.

பள்ளிக்கூடங்களில் பருமன் அவற்றிலுள்ள மூலவளம் ஆகியவற்றை கணித்து கொத்தணிப் பள்ளிக்கூடங்கள் ஒற்றை நிலைப் பள்ளிக்கூடங்கள் அமைக்கப்படும். மாணவர் தொகையை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்கள், மற்றும் பணியாளர்களுக்கு சம்பளம் கொடுக்கும் முகமாக இப்பள்ளிக்கூடங்களுக்கு அரசு நன்கொடை வழங்கும்.

கொழும்பில் ஆனந்தாக் கல்லூரி, றோயல் கல்லூரி, நாலந்தக் கல்லூரி, விசாகாக் கல்லூரி போன்ற கல்லூரிகள் ஒற்றை நிலைப் பள்ளிக்கூடங்கள் எனும் பெயருடன் தனித்துவமான கல்லூரிகளாக விளங்கும். இங்கும் பள்ளிக்கூடங்கள் அர்த்தமற்ற முறையில் ஏற்றத்தாழ்வு நிலையை அடையும்.

வடமாகாணம் உட்பட மற்றைய மாகாணங்களிலும் சில பள்ளிக்கூடங்களும் பிரத்தியோக உயர்வு பெறும் தனியார் பள்ளிக்கூடங்கள் இத்திட்டத்தில் இடம்பெறுகின்றன. அரசின் பள்ளிக்கூட முறைக்கும் புறம்பாகத் தனியார் நிறுவனங்களும் இயங்கும். ஆனால் இவை தேசிய கல்வித்திட்டத்தினை ஏற்று அவற்றிற்கு இணங்க செயற்பட வேண்டும். இப்பள்ளிக்கூடங்களுக்கு மான்ய நிதி உதவி செய்யவும் வழிவகுக்கப்படும். இவைதவிர தனியார் பள்ளிக்கூடங்கள் வர்க்க அடிப்படையில், செல்வந்தர்களின் பள்ளிக்கூடங்களாக விளங்கும் என்பது உறுதி.

1943ம் ஆண்டில் நமது நாட்டில் கல்வி விசேட குழு இந்நாட்டு மாணவர்களுக்கு பாலர் வகுப்புத்தொடக்கம் பல்கலைக்கழகம் வரை அன்னை மொழியே போதனா மொழியாக இருக்கவேண்டும் என்று தீர்மானித்தது. இக் கருத்து உளவியல் மனிதத்துவ சமதர்ம அடிப்படையில் எழுந்ததாம் இது கல்விச்சட்டமாகவும் உருவாக்கப்பட்டது. ஆனால் இச்சட்டம் மாற்றப்பட்டுவிட்டது ஏன் எவ்வாறு மாற்றம் ஏற்பட்டது என்பதற்கு விளக்கம் அளிக்கப்படவில்லை இது போன்ற மாற்றங்கள் மனித உரிமை அடிப்படை மாற்றங்களாகும்.

1972 ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விச் சீரமைப்பிலும் வெள்ளை அறிக்கை நாம் சீர் திருத்தத்திலும் அன்னை மொழியே போதனா மொழி என்று சட்டம் மறுக்கப்படுகிறது

நமது கல்விமுறைக்கு, கல்வி விரிவாக்கத்திற்கு, உயர்வுக்கு புத்துயிர் அளித்தது அன்னை மொழிப் போதனையாகும். ஆனால், நமது கல்வி மரபில் இக்கல்வி அடிப்படை உரிமை மாற்றம் பெறுகின்றது. அன்னை மொழி எனும் சொல், கல்வி மொழி எனும் சொல்லாக மாறி முதல்மொழி எனும்சொல்லாக் விளக்கப்படுகின்றது. அன்னை மொழி, கல்விமொழி, முதல் மொழி என்ற சொற்கள் ஒரே கருத்தினைத் தரமாட்டா.

(5-ம் பக்கம் பார்க்க)

# "உலகில் அச்சம் தரும் வகையில் ஆயுதக்குவிப்பு அதிகரிப்பு"!

## இந்திய வெளிநாட்டமைச்சர் கவலை

புதுடில்லி நவ.

"உலகில் அச்சம் தருகின்ற ஆயுதக்குவிப்பும், அச்சுறுத்தலும், எதிர்ப்பு நிலையும் இன்று அதிகரித்துள்ளது."

மேற்கண்டவாறு இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள போர்த்துக்கல் வெளிநாட்டமைச்சரை வரவேற்ற உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது!

"உலகின் செடுபிடி யுத்தங்களும், பதட்டமும் அதிகரித்துள்ளதால் உலகநாடுகள் அமைதிக்கும், ஸ்திரத்திற்கும் பாடுபட முன்வரவேண்டும்.

"போர்த்துக்கலுக்கும் இந்தியாவிற்குமிடையே நீண்டகாலமாக கலாச்சாரப் பாரம்பரியம் நிலவிவருகிறது. 1980-ம் ஆண்டு இருநாடுகளுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட கலாசாரப் பரிவர்த்தனை ஒப்பந்தம் இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

"போர்த்துக்கலுக்கும் இந்தியாவிற்குமிடையேயிருந்து வரும் நல்லுறவு தொடர்ந்தும் நீடிக்க வேண்டும்" என்றார். (வெ)

## கண்தானம்

சென்னை, நவ.5

அகில இந்திய இளைஞர் மன்ற உறுப்பினர் 55 பேர் கண்தானம் வழங்க முடிவு செய்துள்ளனர். (ஏ)

## பதவிக்காலம் நீடிப்பு

சென்னை, நவ.5

கடந்த பெப்ரவரி 6-ந் திகதி சென்னையில் பல் ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதல் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட தனிநபர் கமிஷனின் பதவிக்காலத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு தமிழ்நாடு அரசு நீடித்துள்ளது. [வெ

## தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும்

[சுன்னாகம்]

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை காலை கல்லூரியில் நடைபெறும். கல்லூரி அதிபர் திரு பொன். நாகரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத் தலைவர் பேராசிரியர் இ. சனசுந்தரம் கலந்துகொள்வார்.

தாபகர் நினைவுரையை யாழ் மாவட்ட சபைத் தலைவர் திரு அ. நடராசா நிகழ்த்துவார். மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி கனகசுந்தரம் பரிசில்கள் வழங்குவார். (வ)

## "வளரும் நாடுகளிடையே ஒற்றுமை ஏற்படவேண்டும்"

புதுடில்லி, நவ. 5

"வளரும் நாடுகளுக்கிடையே ஒற்றுமையும் இசைவும் ஏற்படவேண்டும். லத்தீன் அமெரிக்காவில் பல பிரச்சினைகள் உள்ளன. இதனைத் தீர்த்துவைப்பதற்கு வல்லரசுகள் முனையவேண்டும்".

மேற்கண்டவாறு புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள வெனிசூலா அதிபர் டாக்டர் லூயிஸ்காம் பின்னும், இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியும் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

"சர்வதேச நிறுவனம், உலகவங்கி ஆகியவற்றுக்கு புதியவடிவம் அளிக்கப்படவேண்டும். இவை வளரும் நாடுகளின் பிரச்சினைகளை தீர்க்க முன்வரவேண்டும். வளரும் நாடுகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய உலக மகாநாடொன்றை நடத்தவேண்டும்". (வெ)

## இலங்கையில் இந்திய வம்சா வழியினர் துன்புறுத்தல்

சென்னை, நவ.5

இலங்கையில் இந்திய வம்சாவழிமக்கள் துன்பமடைந்து வருவதாக இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட தமிழக பேராசிரியர் திரு. பாலகிருஷ்ணன் சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அமைச்சர் திரு. எஸ். தொண்டமானை சந்தித்து உரையாடியதாகவும் அவர் தெரிவித்தார். (ஏ)

## குடிநீர் வழங்குவது நிறுத்தப்பட்டது

(மண்டைதீவு)

மண்டைதீவு, புங்குடுதீவு, சோழவத்தை, சரவணை ஆகிய இடங்களுக்கு டிராக்டர் மூலம் இலவசமாக சமூக சேவைப் பகுதியினரால் குடிநீர் வழங்கப்பட்டு வந்ததை நிறுத்துமாறு ஒப்பந்தக்காரர்களுக்கு தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. அருணாசலம் தந்தி மூலம் அறிவித்துள்ளார்

## வேலணையில் தையல்பயிற்சி நிலையம்

(மண்டைதீவு)

வேலணை கிழக்கு மாதர் முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் தையல் பயிற்சி நிலைய ஆரம்ப விழா நிலையத் தலைவர் திருமதி பத்மா சிவஞானம் தலைமையில் வேலணை வங்களாவடிச் சந்தியில் நடைபெறும்.

விழாவுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஊர்காவற்றுறை எம். பி. வண்ணை பொ. இரத்தினம் தையல் பயிற்சிநிலையத்தைத் திறந்து வைத்தார்.

இவ்வைபவத்தில் தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. குணநாயகம் வேலணைப் பகுதிக் கிராம அபிவிருத்தி அதிகாரி செல்வி நவரத்தினம் உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றினர். (வ)

## திருப்பத்தூர் இடைத் தேர்தல்: இந். காங்கிரஸ் வேட்பாளரை தி. மு. க. ஆதரிக்கும்

சென்னை, நவ. 5

"எதிர்வரும் 23-ம் திகதி திருப்பத்தூரில் நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் இந்திராகாங்கிரஸ் வேட்பாளரை ஆதரிப்பதென நாங்கள் முடிவுசெய்துள்ளோம்" எனக் கூறினர் தி.மு.க தலைவர் திரு. மு. கருணாநிதி சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது!

"தமிழ்நாட்டில் சாராயத் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு அ.தி. மு. க. அரசினால் வழங்கப்பட்ட அனுமதிகளில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் குறித்தும் "ரே" கமிஷனும் ஏனைய கமிஷன்களும் விசாரிக்க வேண்டும்.

"இவற்றில் இடம்பெற்றுள்ள ஊழல்களின் உண்மைகள் வெளிவர வேண்டுமானால் முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தமது பதவியை ராஜினாமாச் செய்து இவ்விசாரணைக் கமிஷன்களின் முன்னிலையில் சாட்சியமளிக்க வேண்டும் என்றார். (வெ)

## திருபத்தூர் தேர்தல் பொது வேட்பாளர்

சென்னை, நவ.5

திருப்பத்தூர் இடைத்தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றி ஆராய்வதற்காக ஏழு அரசியல் கட்சிகள் இன்று கூடுகின்றன.

இந்திய கம்யூனிஸ்ட்கட்சி மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லிம்லீக், காந்தி காமராஜ் காங்கிரஸ், காந்திகாமராஜ் தேசியகாங்கிரஸ் போன்ற கட்சிகளே பொது வேட்பாளரை நிறுத்துவதற்காக இன்று கூடவுள்ளன. (வெ)

## புதைக்கப்பட்டிருந்த சடலத்தில் உள் உறுப்புக்கள் இருக்கவில்லையாம்!

[மாவிட்டபுரம்]

மல்லாகம் நீதவானின் உத்தரவுப்படி சுழிபுரம் மயானத்தில் புதைக்கப்பட்டு பின் தோண்டி எடுத்துப் பரிசோதனை செய்யப்பட்ட சடலம் உள் உறுப்புக்களைக் கொண்டிருக்கவில்லை என்று கூறப்படுகிறது.

விசாரணைக்காகச் சென்ற சமயம் மல்லாகத்தில் மரணமான சுழிபுரத்தைச் சேர்ந்த திரு நாவுக்கரசு வரதராஜாவின் சடலம் சுழிபுரம் சம்பில்துறை மயானத்தில் புதைக்கப்பட்டது.

அவரது மனைவி அமிர்தநாயகி தெரிவித்த புகாரையடுத்து அதனைத் தோண்டி எடுத்து பரிசோதிக்குமாறு மல்லாகம் நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இதன்படி கொழும்பு வைத்தியக் கல்லூரி பேராசிரியர் எச். ஜே. வி. பொன்னம்பலம் சுழிபுரம் மயானத்தில் சடலத்தைப் பரிசோதித்தார்.

காங்கேசன்துறை பொலிஸ் குற்றத்தடுப்பு சப் இன்ஸ்பெக்டர் பீரிஸ், சார்ஜன்ட் சுந்தரநாதன் ஆகியோர் மேற்படி பரிசோதனைக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

சடலத்தின் உள் உறுப்புகள் அகற்றப்பட்டிருந்தது.

சடலம் "எம்பாம்" பண்ணப்பட்ட பின்பே புதைக்கப்பட்டதால் உள் உறுப்புகள் இருக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

பரிசோதனையின்பின் சடலம் தகனம் செய்யப்பட்டது. பரிசோதனையின் பெறுபேற்று அறிக்கையைப் பேராசிரியர் பொன்னம்பலம் மல்லாகம் நீதவானிடம் சமர்ப்பிப்பார்.

சடலம் தோண்டியெடுத்து பரிசோதனை செய்யப்பட்டபோது மரணமானவரின் மனைவி மயானத்தில் மயக்கமுற்று மூர்ச்சித்தார். (ஏ)

## மாதகல் இராணுவ முகாமில் இரண்டு மணி நேரம் தாக்கப்பட்டதாக இராணுவ அதிகாரிக்கு மீனவர் புகார்

(மாவிட்டபுரம்)

மாதகல் இராணுவ முகாமில் வைத்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் தாக்கப்பட்டது குறித்து பலாலி இராணுவமுகாம் உயரதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை மீன்பிடிக்கச் சென்ற மயிலிட்டியைச் சேர்ந்த மீனவர்களை மாதகல் இராணுவமுகாமருகில் வைத்து வழிமறித்த இராணுவத்தினர் அவர்களை வள்ளத்துடன் கரைக்குக் கொண்டுவந்து சுமார் 2 மணித்தியாலமாக தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இம்மீனவர்கள் பலாலி இராணுவமுகாம் உயரதிகாரிகளிடம் இதுகுறித்து புகார் செய்தனர்.

துப்பாக்கியுடன் பலவித சித்திரவதைகளை செய்ததாகவும் அவர்கள் புகாரில் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து பலாலி இராணுவ முகாம் உயரதிகாரிகள் இச்சம்பவம் குறித்து விசாரணை செய்துவருகின்றனர்.

தாக்கப்பட்ட மீனவர்கள் சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை காம் அடையாளம் காட்டமுடியுமெனவும் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஏ)

## காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் 28,000 ரூபா பைப்புகள் திருட்டு!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை 3ம் கட்ட அபிவிருத்திப் பிரிவின் களஞ்சிய சுவரில் திடீரென துவாரம் ஒன்று காணப்படவே அது பற்றி ஆராய்ந்தபோது அங்கிருந்து பல ஆயிரம் ரூபா பெறுமதியான பைப்புகள் திருடப்பட்டது தெரியவந்தது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை 3ம் கட்ட அபிவிருத்திப் பிரிவின் களஞ்சியத்தில் அபிவிருத்தி வேலைகளுக்குத் தேவையான ஏராளமான பொருட்கள் இருந்தனவாம்.

இந்த களஞ்சிய மதில் சுவரில் திடீரென துவாரம் ஒன்று தென்படவே அதுபற்றி ஆராய்ந்தபோது வெகு சாதுரியமாக நிகழ்த்தப்பட்ட திருட்டு அம்பலத்திற்கு வந்துள்ளது

மேற்படி துவாரம் ஊடாக ஒவ்வொன்றும் 450 ரூபா பெறுமதியான 57 பைப்புகள் திருடப்பட்டிருந்தன. இவை சுமார் 28 ஆயிரம் ரூபா பெறுமதியானவையெனக் கூறப்படுகிறது.

இது குறித்து காங்கேசன்துறைப் பொலிசில் புகார் தெரிவிக்கப்பட்டதன் பேரில் பொலிசார் தீவிர விசாரணையில் இறங்கியுள்ளனர்.

பாதுகாவல் அதிகாரிகள் எந்நேரமும் காவலில் ஈடுபட்டிருக்கின்றபோதும் இவ்வாறான திருட்டு இடம்பெற்றது மர்மமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து சிமெந்துத் தொழிற்சாலை 3ம் கட்ட அபிவிருத்திப் பிரிவில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. [ஏ]

## யாழ். கோஷ்டி வெற்றி

[அரியாலை]

விளையாட்டமைச்சின் ஆதரவில் யாழ். பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் வவுனியா டிவிசன் கோஷ்டியும், யாழ்ப்பாணம் டிவிசன் கோஷ்டியும் கலந்துகொண்ட உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

யாழ்ப்பாண டிவிசன் கோஷ்டி 9-0 கோல்களால் வெற்றியீட்டியது. திரு எஸ். அந்தோனிப்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார். [ஏ]

## களவுப் பொருளா?

(சங்கானை)

சங்கானைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நெசவாலையில் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டிருந்த ஒருவர் சந்தேகத்தின்மீது ஒருவரிடமிருந்த இரு பார்சலைச் சோதித்தபோது அதில் குத்துவிளக்கு ஒன்றின் அடிப்பாகம் இருக்கக் காணப்பட்டது. வி. சிற்றம்பலம், வி. ஆர். ஸ்ரீராம விலாஸ் என்ற பெயர் பொறிக்கப்பட்ட இப்பொருளைப் பாதுகாப்பு சேவையாளர் ஆலை முகாமையாளரிடம் ஒப்படைத்துள்ளார். [வ]

## முதலில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய வேலைத்திட்டங்களுக்கு மக்களின் பங்களிப்பைப் பெற முடியும். மக்களது தேவைகளை அரசாங்கம், தன்னிச்சை உதவி நிறுவனங்களின் அனுசரணையுடன் நிறைவேற்றுதல் கிராமத்திலுள்ள வளங்களை அபிவிருத்திக்கு ஒன்று திரட்டுதல், சமூக கலாசார பொருளாதார முன்னேற்றத்துக்கான தகவல்களையும், அறிவையும் ஊட்டுதல் முதலான பல நடவடிக்கைகளையும் செறிவாக கையாள்வது மூலம் சங்கம் உயிர்வாழ்கிறது என்பதைப் பலருக்கும் நிரூபிக்கவேண்டும். சங்கம் எப்பொழுதுமே மேல் மட்ட நிறுவனங்களுடனும் மக்களுடனும் இடையறுத் தொடர்புள்ளதாக இருக்க வேண்டும். கிராமோதய சபைகளில், கிராம அபிவிருத்திச் சங்கமும் ஒரு அங்கத்தவராக உள்ளதால் எதிர்காலத்தில் கிராம அபிவிருத்திச் சங்கங்களிடமிருந்து இன்னும் அதிகமாக எதிர்பார்க்கப்படும்."

(மா)

## அதிகாரிகளின்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பானங்களும் மற்றும் இனிப்பு வகைகளும் விற்கப்படுவதாக முறைப்பாடுகள் தமக்கு வந்துள்ளதாக யாழ். உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் திரு.ரி மார்க்கண்டு தெரிவித்தார். இதன் பயனாகத்தாம் கடுமையான சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கவிருப்பதாகவும் இது விஷயமாக யாழ் மாவட்டத்தில் உள்ள சினிமாத் தியேட்டர் உரிமையாளர்கள் சட்டரீதியான மனிதாபிமான விலைகளில் குளிர்பானங்களையும் மற்றும் இனிப்பு வகைகளையும் ஏனைய உணவுப்பொருட்களையும் விற்கநடவடிக்கைகளைமேற்கொண்டு தமது இனைக்களைத் திற்குத் தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு திரு. ரி. மார்க்கண்டு யாழ். மாவட்டசினிமாதியேட்டர் உரிமையாளர்களுக்குகடித மூலம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

(அ)

## அகண்ட நாம பஜனை

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா சமித்தியின் அகண்ட நாம பஜனை, யாழ். பல்கலைக் கழகத்துக்கு முன்பாக உள்ள பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா சமித்தி மண்டபத்தில் நாளை மாலை 5 மணிமுதல் ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணி வரை நடைபெறும்.

## இன்று கொடித்தினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய சுயரோகம் தடுப்புச் சங்கத்தின் 1981-ம் ஆண்டு வருடாந்தக் கொடித்தினம் இன்று நடைபெறுகிறது.

அக்டோபர் மாதம் பதினொரும் திகதி நடைபெறவிருந்த கொடித்தினம்சூழ்நிலை காரணமாக இன்று வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

## தனியார்வாகன சேவைச்சங்கம்

(சுன்னாகம்)

வடமாநில தனியார் வாகன சேவைச் சங்கம் இனி கூட்டுறவுச்சங்க அடிப்படையில் இயங்கவுள்ளது. இச்சங்க அங்கத்தவர்கள் ஒவ்வொரு பஸ்ஸுக்கு 1000 ரூபா வீதம் பங்காளிகளாகச் சேர்ந்து சுமார் இரண்டரை லட்சம் ரூபாவை வாகனப்பாதுகாப்பு நிதியாக ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

அண்மையில் சுன்னாகத்தில் உள்ள மேற்படி சங்கக் காரியாலயத்தில் திரு. என். எஸ். பிரான்சிஸ் தலைமையில் கூடிய தற்காலிக சங்க யாப்புக்குழு மேற்கண்ட முக்கிய தீர்மானங்களை எடுத்து புதிய யாப்பைத் தயாரித்துள்ளது.

## பாரதி மண்டபம்

சென்னை நவ. 5

எட்டயபுரத்தில் பாரதி மணிமண்டபத்தை புதுப்பிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இதற்கென அரசு இரண்டரை லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

(க)


## வெளிநாடு பயணமா?

உலகின் எப்பாகத்துக்கு செல்லவேண்டுமானாலும்

யாழ்ப்பாணத்தில் எங்களை நாடுங்கள்.

நம்பிக்கையான, பிரபலம் வாய்ந்த MACKINNON MACKENZIE & Co of CEYLON LIMITED ன் யாழ்ப்பாணக்கிளை

விரும்பிய விமானத்தில் ஆகக்குறைந்த கட்டணங்களில்

**விமான டிக்கட்டுகள்**

சிங்கப்பூர் (ஒரு வழி) கூட்டாக செல்வோருக்கு மேலும் விசேட கழிவு வழங்கப்படும்.

ஃ இலங்கையில் AMERICAN EXPRESS பிரதிநிதித்துவம் பெற்ற மக்கினென்ஸ் இடம் வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் (TRAVELLER CHEQUES) பிரயாண காசோலைக பெற்றுக்கொள்ளலாம்.

★ **நைஜீரியன் விசா**

நைஜீரிய டிக்கட் எம்மிடம் பெறுவோருக்கு மேலும் குறைந்த கட்டணத்தில் விசா பெற்றுத்தரப்படும்.

தொடர்பு கொள்க:

**மக்கினென்ஸ் ட்ரவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்.**

8, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்.

த. பெ. எண்; 92 தொலைபேசி; 8154



## ஹோம்பினென்ஸ்லிமிட்டெட்

82, கன்னதிட்டி ரேட், யாழ்ப்பாணம்.

போன்; 8310

மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

**உல்லாச பஸ் சேவை**

யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்

3-11-81ம்திகதிசெவ்வாய்க்கிழமைதொடக்கம்

டிக்கட் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினென்ஸ் லிமிட்
82, கன்னதிட்டிரேட், யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 8310)

(2) யாழ்.மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல 6. நவீனசந்தை. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7596

புறப்படும் நேரம் மாலை 6-00 மணி

செல்லும் தினங்கள்

செவ்வாய், வியாழன், ஞாயிறு

கொழும்பிலிருந்து திரும்பும் தினங்கள்

திங்கள், புதன், வெள்ளி

**ஹோம் பினென்ஸ் லிமிட்டெட்**

463, காலி ரேட், கொழும்பு.

போன்: 89190



## சுப்பர் லேட்னிங் எக்ஸ்பிரஸ் கொம்பனி லிமிட்டெட்

### ஸ்தாபனத்தாரின் மகிழ்வான செய்தி

ஃ உங்கள் பயணம் சொகுசானதாக அமைய ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பயணச் சேவை இன்று முதல் மங்களகரமானதாக ஆரம்பமாகின்றது.

கொழும்பு - யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை

காங்கேசன்துறை - யாழ்ப்பாணம் - கொழும்பு

நீண்டகாலமாக யாழ்ப்பாண மக்கள் அனுபவித்து வந்த கஷ்டத்தை நீக்கும்பொருட்டு பல லட்ச ரூபா செலவில் சிங்கப்பூரிலிருந்து வருவிக்கப்பட்ட பொறியியலாளர்களின் மூளைவளங்களை பயன்படுத்தி அவர்களது நேரடி கண்காணிப்பில் உள்ளூரில் நிர்மாணிக்கப்பட்ட உறங்கல் இருக்கை வசதி கொண்ட

**'லக்ஸறி ரூறிஸ்ட் பஸ்கள்"**

சேவைக்கு விடப்படுகின்றன.

நீண்டதூர பயணத்தை மகிழ்வுடனும் லாபத்துடனும் கடக்கலாம்.

கட்டணம்:

**ரூபா 65-00** (ஒரு வழிப்பயணத்திற்கு மட்டும்)

புறப்படும் நேரங்கள்

★ தினசரி பிற்பகல் 6-30 மணிக்கு காங்கேசன் ரவல்ஸ் ஸ்தாபனத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்தடைந்து, இரவு 8-00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு அதிகாலை 5-30 மணிக்கு கொழும்பு சென்றடைந்து தெகிவளை சந்தி வரை சேவையாற்றும்.

★ இரவு 8-30 மணிக்கு கொழும்பு ஒல்கொட் மாவத்தையில் இருந்து (கோட்டை புகையிரத நிலையம் முன்பாகவிருந்து) புறப்பட்டு அதிகாலை 5 30 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடைந்து காங்கேசன்துறை வீதி வழியாக காலை 6-15 மணிக்கு காங்கேசன்துறை சென்றடையும்.

ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்

கொழும்பு

ஜே. எம். எஸ். மிரண்டாஸ்
109, ஒல்கொட் மாவத்தை.
கொழும்பு 11.
போன்: 27031

லெக்ஷ்மி பவான்
(பிராமணாள் ஹோட்டல்)
97, ஒல்கொட் மாவத்தை.
கொழும்பு 11. போன்: 24821, 28244

யாழ்ப்பாணம்

ஸ்ரீ இராமகிருஷ்ணா,
இல. 9, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7497, 7065

ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ்,
141, நவீன சந்தை.
யாழ்ப்பாணம்.
போன்: 660.

காங்கேசன் ரவல்ஸ்,
பிரதான வீதி.
காங்கேசன்துறை.
போன்: 34

தலைமையகம்

**சுப்பர் லேட்னிங் எக்ஸ்பிரஸ் கொம்பனி லிமிட்டெட்**

97, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 11.

போன்: 24821, 28244


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சினன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில 1981 ம் ஆண்டு நவம்பர் 6-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper, The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 889. 8126.